தாமான் துன் அமீனா தமிழ்ப்பள்ளி

தமிழ் மொழி

ஆண்டு 4

**தலைப்பையொட்டி கொடுக்கப்பட்ட முன்னுரையைப் பூர்த்திச் செய்க.**

மொழி

**முன்னுரை 1**

ஒன்றினைப் புரிந்து தெளிவதற்கும் அறிவை ______________________ கொள்வதற்கும் மொழி மிகவும் அவசியம். நாம் நினைப்பது, முடிவெடுப்பது , செயல்படுவது ஆகிய அனைத்துமே மொழி மூலமாகவும் மொழியின் ________________ நடைபெறுகின்றன. அறிவு வேட்கை என்பது பயணம் என்றால் மொழிதான் பாதை. இது பெரியவர்களுக்கு மட்டுமன்று ___________________பொருந்தும்.

| குழந்தைகளுக்கும் | வளர்த்துக் | மொழி | உதவியாலுமே |
|---|---|---|---|

**முன்னுரை 2**

நம் ஒவ்வொருவருக்கும் தொடர்பு கொள்ள ______________ மிகவும் அவசியம். குழந்தைகள் _______________ வளர்த்துக் கொள்வதற்காகப் பள்ளிக்குச் செல்கிறார்கள். அங்குக் கணிதம், அறிவியல் அல்லது வேறு எந்தப் பாடத்தை புரிந்து தெளிவதற்கும் மொழி ___________________. தமிழ், ஆங்கிலம், மலாய் போன்ற மொழிகளைக் _____________ தெளிவு பெறுவதற்கும் கூட அடிப்படை மொழியறிவு தேவை.

| கற்றுத் | அவசியமாகிறது | மொழி | அறிவை |
|---|---|---|---|

LIVEWORKSHEETS